# இனப்படுகொலை முடிவிற்கு வரவேண்டும் - எல்லோருக்கும் பொதுவானது அமைதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை ! ... முதல் பக்கத் தொடர்ச்சி

சில நாட்களுக்கு முன்னால், மற்றொரு செய்தி வந்தது...

காசாவில் மரணத்தின் விளிம்பில் தவித்துக்கொண்டு இருக்கும் பாலஸ்தீன மக்களுக்கு வழங்க, உணவுப் பொருட்கள் மருந்துகள் குழந்தைகளுக்கான பால் பவுடர்களைக் கொண்டு சென்ற, 47 நாடுகளைச் சேர்ந்த தன்னார்வலர்களைத் தடுத்து கைது செய்திருக்கிறது இஸ்ரேல்.

பன்னாட்டு சட்டங்களை மீறும் இது போன்ற செயல்களைக் கண்டிக்காமல் நம்மால் இருக்க முடியுமா?

காசாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இரக்கமற்ற படுகொலைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். பாலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் நடத்திக் கொண்டிருக்கும் இனப்படுகொலை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். இதுதான் இந்தக் கூட்டத்தின் நோக்கமாக அமைந்திருக்கிறது.

இதற்கான முயற்சிகளை, இந்திய ஒன்றியத்தை ஆளக்கூடிய பா.ஜ.க. அரசு வேகமாக மேற்கொள்ளவேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் மூலமாக எல்லோருடைய சார்பிலும் நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு, இஸ்ரேல் மற்றும் பிற தொடர்புடைய நாடுகளுக்கு அழுத்தம் கொடுத்து, இந்தத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பிற பன்னாட்டு அமைப்புகளுடன் இணைந்து, காசாவில் அமைதியை நிலைநாட்டவும், மனிதாபிமான உதவிகளை செய்யவும், இந்திய அரசு முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மனிதாபிமானம் இருக்கும் எல்லோரும் இதை வேறொரு நாட்டு விவகாரமாக நாம் பார்க்கக் கூடாது.

உலக அமைதி என்பது, எல்லோருக்கும் பொதுவானது! மனித உரிமை என்பதை எல்லோரும் காக்க வேண்டும்! மானுட உயிர்கள் ஒவ்வொன்றும் விலைமதிப்பு இல்லாதது!





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.10.2025) சென்னை, எழும்பூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு காசா இனப்படுகொலைகளை கண்டித்து தோழமைக் கட்சித் தலைவர்களுடன் முழக்கமிட்டார். உடன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தோழமைக் கட்சித் தலைவர்கள் கு.செல்வப்பெருந்தகை, மு.வீரபாண்டியன், தொல்.திருமாவளவன், எம்.எச்.ஜவாஹிருல்லா, கே.ஏ.எம்.முகமது அபுபக்கர், தி.வேல்முருகன், கே.நித்தியானந்தன், தமிமுன் அன்சாரி, பழ.ஆசைத்தம்பி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்கள் கே.பாலகிருஷ்ணன், திருமதி உ.வாசுகி, ஜி.ராமகிருஷ்ணன் உள்ளிட்ட நிருவாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தோழமைக்கட்சியின் நிருவாகிகள் உள்ளனர்.

இந்த மூன்றையும் காக்கின்ற கடமை நம் எல்லோருக்கும் இருக்கிறது!

இந்த மோசமான நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு, உணவு மருத்துவம் உள்ளிட்ட அனைத்து அவசிய உதவிகளும், உடனடியாக முழுமையாக வழங்கப்பட வேண்டும்.

பாலஸ்தீனர்களின் மறுவாழ்வுத் திட்டம், காசாவை மறு கட்டமைப்பு செய்வது மனிதாபிமான உதவிகளை தொடர்ச்சியாக வழங்குவது ஆகியவை குறித்து தெளிவான வாக்குறுதிகள் வழங்கப்பட வேண்டும்!

அனைத்து பணயக் கைதிகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும்.

உலக நாடுகள் முன் வைக்கும் நிபந்தனைகள் உறுதிமொழிகள், பாலஸ்தீன மக்களுக்கு நன்மை செய்வதாக அமைய வேண்டும்.

இந்த நேரத்தில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த செய்தியை உங்களிடம் நான் பகிர்ந்து கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வருகின்ற 14ஆம் நாள், தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற இருக்கிறது.

**சட்டப்பேரவையில் தீர்மானம்!**

இந்தக் கூட்டத்தொடரில், காசாவில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதலைக் கண்டித்தும், அங்கு உடனடியாக போர் நிறுத்தம் தேவை என்பதை வலியுறுத்தியும், அதற்கான முயற்சிகளை இந்திய அரசு எடுக்கவேண்டும் என்ற கோரிக்கை வைத்தும், சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்படும். இந்தத் தீர்மானம் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதாக இருக்கும்; அரசியல் வேறுபாடுகளைக் கடந்து, அனைத்துக் கட்சியினரும் இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பார்கள் என்று நான் முழுமையாக நம்புகிறேன்.

இந்த கூட்டம் மூலமாக, காசா மீதான இஸ்ரேல் தாக்குதலுக்கு என்னுடைய கடுமையான கண்டனத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்பாவி மக்கள் உயிர் இழப்பது உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்ற என் விருப்பத்தை கோரிக்கையாக முன் வைத்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### காசா மீது தாக்குதல்: ஒன்றிய அரசை வலியுறுத்தி

## சட்டமன்றக் கூட்டத் தொடரில் தீர்மானம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 10 -

காசா மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதல் தொடர்பாக, சரியான முடிவெடுக்க ஒன்றிய அரசை வலியுறுத்தி வரும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

அது வருமாறு:-

**காசாவில் உலகமே பார்க்க இஸ்ரேல் நடத்தி வரும் அப்பட்டமான மனித உரிமை மீறல் கடுமையாகக் கண்டிக்கத்தக்கது; உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டியது!**

**எங்கோ நடக்கிறது என்று உலகின் மிகப் பெரும் ஜனநாயகமான இந்தியா இந்த விவகாரத்தில் கண்மூடி இருக்கக் கூடாது. பாலஸ்தீனத்தைத் தொடக்கத்திலேயே அங்கீகரித்த கொள்கையுடைய இந்தியா மீண்டுமொரு முறை வரலாற்றில் சரியான முடிவை எடுக்க வேண்டிய நேரம் இது.**

**இதற்காக ஒன்றிய அரசை வலியுறுத்தி, வரும் சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே தீர்மானம் கொண்டுவரப்படும்!**

**மனிதம் காப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

# அமைச்சர் கே.என்.நேரு கண்டனம்!

### முதல் பக்கத் தொடர்ச்சி

நடத்திவிட்டு போனார் பிரதமர் மோடி. இதன் மூலம் தேர்தல் தேதி ரகசியத்தைத் தேர்தல் ஆணையம் காக்கத் தவறியது அப்பட்டமாகவே வெளிப்பட்டது.

பீகாரில் சுமார் 8 கோடி வாக்காளர்கள் உள்ளனர். SIR என்ற பெயரில் தேர்தல் ஆணையம் பல லட்சம் வாக்காளர்களை நீக்கியது நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. உச்ச நீதிமன்றமே கண்டித்தது. பீகார் வாக்காளர் பட்டியலிலிருந்து முதலில் 65 லட்சம் பேரைத் தேர்தல் ஆணையம் நீக்கியது. அடுத்து 3.7 லட்சம் பேரை நீக்கினார்கள். இஸ்லாமியர்கள், பட்டியல் சமூகத்தினர், பெண்கள் என்று குறிவைத்து இந்த நீக்கம் நடந்தது.

இப்போது புதிதாக 21 இலட்சம் பேரை வாக்காளர் பட்டியலில் இணைத்திருக்கிறது தேர்தல் ஆணையம். நீக்கப்பட்ட 3.7 லட்சம் பேரின் விவரங்களைச் சமர்ப்பிக்குமாறும், புதிதாகச் சேர்க்கப்பட்ட 21 இலட்சம் பேரும் முன்பு நீக்கப்பட்ட வாக்காளர்களா? அல்லது புதிய வாக்காளர்களா? என்ற விவரங்களை அளிக்குமாறும் தேர்தல் ஆணையத்திடம் உச்ச நீதிமன்றம் கேட்டிருக்கிறது.

**தேர்தல் ஆணைய 'நேர்மை'!**

தேர்தல் ஆணையத்தை நோக்கி உச்ச நீதிமன்றத்தின் கேள்விகள், SIR மேற்கொள்வதில் தேர்தல் ஆணையத்திடம் உள்ள நேர்மையை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

பீகாரில் ஒரே தொகுதியில் 80,000 இஸ்லாமியர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்க முயற்சி நடந்ததாக மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் அவர்கள் குற்றம்சாட்டினார். பாஜக கூட்டணியில் இருக்கும் ஒன்றிய அமைச்சர் சிராக் பாஸ்வானின் சொந்தத் தொகுதியிலேயே 80 சதவிகித பட்டியல் சமூகத்தினரிடம் தேர்தல் ஆணையம் கேட்கும் ஆவணங்கள் இல்லை. பாஜகவுக்கு எதிராக வாக்களிக்கும் இஸ்லாமியர்கள். பட்டியல் வகுப்பினர் உள்ளிட்டவர்களின் வாக்குகளைப் பறிப்பதே SIRன் நோக்கம் என்பது அப்பட்டமாக வெளிப்படுகிறது.

பீகாரில் பல லட்சக்கணக்கானவர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து ஏன் நீக்கினார்கள்? அதிலிருந்து சில இலட்சக்கணக்கானோரை மீண்டும் ஏன் சேர்த்தார்கள்? என்பதற்குத் தேர்தல் ஆணை யம் தெளிவான பதில் அளிக்கவில்லை. ஜனநாயகத்தின் ஆணிவேரான தேர்தலை நேர்மையோடு நடத்துவதே தேர்தல் ஆணையத்தின் தலையாய பணி. ஆனால், தேர்தல்களில் தில்லுமுல்லு செய்து வெற்றியை ஈட்ட முனையும் பாஜகவின் நடவடிக்கைகளுக்குத் துணை போவதாகத் தேர்தல் ஆணையம் மாறிவிடக் கூடாது.

**வெட்ட வெளிச்சமான மோசடித்தனம்!**

பீகாரில் SIRல் நடைபெற்றுள்ள மோசடியை Scroll இணையப் பத்திரிகை கள ஆய்வு மூலம் வெட்ட வெளிச்சமாக்கியது. பீகாரின் மூன்று தொகுதிகளில் உள்ள 200 வாக்குச்சாவடிகளில் 10ஐ பார்வையிட்டு, 100 பேரிடம் பேட்டி கண்டது. இவர்களில் வாக்காளர் பட்டியலிலிருந்து பெயர் நீக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அடங்குவர். இறந்துவிட்டதாகக் கருதப்பட்டவர்கள், நிரந்தரமாக இடம் பெயர்ந்தவர்கள், பல இடங்களில் பதிவு செய்தவர்கள், அல்லது காணப்படாதவர்கள் (ABSENT) என தேர்தல் ஆணையம் நான்கு காரணங்களுக்காக வாக்காளர்களை நீக்கியிருந்தது.

நாங்கள் சந்தித்த பெரும்பாலான வாக்காளர்கள், பல ஆண்டுகளாக அதே முகவரியில் வசித்து வந்த போதிலும், 'காணப்படவில்லை' (ABSENT) அல்லது 'இடமாற்றம்' (SHIFTED) என்று குறிக்கப்பட்டி ருந்தனர் என Scroll தெரிவித்திருக்கிறது. தேர்தல் ஆணையம், "வீடு வீடாகச் சென்று சரிபார்ப்பு" நடத்தப்படும் என்று தெளிவாகக் கூறியிருந்த போதிலும், வாக்குச்சாவடி அலுவலர்கள் (BLOs) தங்கள் வீடுகளுக்கு வரவே இல்லை என்று வாக்காளர்கள் Scroll செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்கள்.

**சதியை எதிர்த்து போராட்டம்!**

பீகாரில் கடைப்பிடிக்கப்பட்ட தில்லுமுல்லுகளை போல தமிழ்நாட்டிலும் செயல்படுத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். கள ஆய்வு மேற்கொள்ளப்படாமலேயே நமது வாக்காளர்களை நீக்கவும் வெளி வாக்காளர்களைச் சேர்க்கவும் முயற்சிகள் நடக்கலாம். இந்தச் சதியைத் தமிழ்நாடு ஒன்று திரண்டு போராடும்.

இவ்வாறு கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருப்பூர் மாவட்டம், முத்தூர் பேரூராட்சி, செங்கோடம்பாளையம் வார்டு எண்1ல் 15வது நிதிக்குழு மான்யம் திட்டத்தின் கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் நீர்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணியினை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ. சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி., வெள்ளக்கோயில் ஒன்றிய கழகச் செயலாளர் கே.சந்திரசேகரன், செண்பகம் பாலு, சுந்தரம்பாள், மு.க.அப்பு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# முரசொலி செல்வம்

### அக்டோபர் 10 (2024)



முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளையான முரசொலியின் பணிகளைத் தன் தோளில் சுமந்துகொண்டு இளமைப் பருவம் முதலே திறம்படச் செயலாற்றியவர்.

தலைசிறந்த எழுத்தாளர் – பத்திரிகையாளர் – நூலாசிரியரான இவர், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்த கருத்துரிமைப் போராளி.

கழகத்தின் போர்வாளான முரசொலி நாளேட்டின் 35 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியராகப் பொறுப்பேற்று தன் எழுத்துகளால் ஜனநாயகக் குரலாக ஒலித்தவர்.

அடக்குமுறைக்கு அஞ்சாமல் சட்டமன்றத்தில் கூண்டிலேறி கருத்துரைத்தவர். தேர்தல் களம் முதல் திரைப்படப் பணிகள் வரை அனைத்துத் துறைகளிலும் முத்திரையைப் பதித்தவர். எந்த நிலையிலும் கழகமே மூச்சு என வாழ்ந்த ஆழமான கொள்கைவாதி. சிலந்தி என்ற பெயரில் முரசொலியில் அவர் எழுதிய நையாண்டியும் நகைச்சுவையும் ததும்பும் கட்டுரைகள் கழகத்தின் இளைய தலைமுறையினருக்குக் கொள்கை இரத்தம் பாய்ச்சும் வலிமை கொண்டவை. தன் இறுதிமூச்சு நிற்கும் வரை முரசொலியில் கட்டுரை எழுதியவர்.

முரசொலியில் தன்னுடைய கட்டுரைகளைப் போலவே திராவிட இயக்கத்தின் இளைய எழுத்தாளர்களுடைய கட்டுரைகளைத் தொடர்ந்து பதிவு செய்து ஊக்குவித்தவர் அவர். தொலைக்காட்சி விவாதங்களில், சமூக வலை தளங்களில் கருத்துரைப்போரைத் தேடிக் கண்டறிந்து இயக்கத்தின் படைக்கலனாக மாற்றியவர்.

"சிறுவயது முதலே எனக்கு அண்ணனாக – வழிகாட்டியாக, இயக்கப் பணிகளில் ஆலோசனைகள் வழங்கி, நெருக்கடி நேரங்களில் தெளிவான தீர்வுகளை முன்வைத்து, கழகத்துடனான என் வளர்ச்சியில் தோளோடு தோள் நின்றவர். மிச்சமிருந்த தோளை நான் இழந்தேன். கழகத்தின் கொள்கைத் தூண் ஒன்றை நாம் இழந்தோம். "போய்விட்டீர்களே.. போர்முரசே.. திராவிட முரசொலித்த முரசொலி செல்வமே.. பண்பின் திருவுருவமே... திராவிட இயக்கத்தின் படைக்கலனே... கழகத்தின் கொள்கைச் செல்வமே.. நெஞ்சிலும் நினைவிலும் என்றும் நிலைத்திருப்பீர்!"'' என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**